

## 56வது நினைவு நாள்

# அமைதிப் பேரணியாக சென்று அண்ணா நினைவிடத்தில் மு.க.ஸ்டாலின் அஞ்சலி

சென்னை, பிப்.3–

மறைந்த முன்னாள் முதலமைச்சர் அண்ணாவின் 56வது நினைவு நாளையொட்டி தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில், தி.மு.க.வினரின் அமைதி பேரணி நடைபெற்றது.

வாலாஜா சாலையில் உள்ள அரசு விருந்தினர் மாளிகை அருகில் இருந்து புறப்பட்டு, அண்ணா நினைவிடம் வரை நடைபெற்ற அமைதிப் பேரணியில் தி.மு.க. பொதுச்செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, அமைச்சர்கள் எம்.ஆர்.கே பன்னீர் செல்வம், ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மெய்யநாதன், கயல்விழி செல்வராஜ், மதிவேந்தன் மற்றும் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு குழு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், சென்னை மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.



இதனை தொடர்ந்து அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மலர் தூவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார். முன்னதாக மெரினாவில் கருணாநிதி நினைவிடத்திலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செய்தார்.

### லட்சியப் பயணத்தில் வெல்ல பாடுபடுவோம்

அண்ணாவின் 56–வது நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:–

அண்ணா வழியில் அயராது உழைப்போம்! – தந்தை பெரியார் குறித்து பேரறிஞர் அண்ணா கூறியது:

“எது நேரிடினும் மனத்திற்பட்டதை எடுத்துச் சொல்வேன் என்ற உரிமைப் போர் பெரியாருடைய வாழ்வு முழுவதும். அதிலே அவர் கண்ட வெற்றி மிகப்பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை; இன்று அனைவரும் பெற்றுள்ளனர்.”

தந்தை பெரியாரின் புகழொளியையும் அறிவொளியையும் தந்து நம்மை ஆளாக்கிய தமிழ்த்தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணாவுக்குப் புகழ்வணக்கம்.

நம்முடைய நோக்கம் பெரிது! அதற்கான பயணமும் பெரிது! வம்பிழுக்கும் வீணர்கள் தெம்பிழந்து ஓடுவார்கள்; நாம் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று இலட்சியப் பயணத்தில் வெல்லப் பாடுபடுவோம். இவ்வாறு முதலமைச்சர் ஸ்டாலின் கூறியுள்ளார்.




அண்ணாவின் நினைவு நாளை முன்னிட்டு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இன்று திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோயிலில் நடைபெற்ற பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொதுமக்களுடன் அமர்ந்து உணவருந்தினார். உடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா, முதன்மை செயலாளர் பி.சந்தரமோகன், ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர்கள் என்.சிற்றரசு, எஸ்.மதன் மோகன், இணை ஆணையர் கே.ரேணுகாதேவி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## ராமநாதபுரம் அருகே கடற்கரையில்

# ஒலிம்பிக் நீர் சறுக்கு அகாடமி பணிகளை ஒரு ஆண்டுக்குள் முடிக்கத் திட்டம்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி

ராமநாதபுரம், பிப்.3–

ராமநாதபுரம் மாவட்டம் பிரப்பன்வலசை கடற்கரையில் ஒலிம்பிக் நீர் சறுக்கு அகாடமி பணிகளை ஒரு ஆண்டுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

ராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளி அருகே பிரப்பன்வலசை கடற்கரையில் ரூ.42.90 கோடியில் ஒலிம்பிக் நீர் சறுக்கு அகாடமி அமைக்கப்பட உள்ளது. அதற்காக கடந்த மாதம் சென்னையில் இருந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார். இந்நிலையில் பிரப்பன் வலசை கடற்கரையில் நீர் சறுக்கு அகாடமி அமைய உள்ள இடத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்னர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நிருபர்களிடம் கூறியதாவது:–

கடந்த 2024–25ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பிரப்பன்வலசை கடற்கரையில் சர்வதேச தரத்திலான நீர் சறுக்கு அகாடமி அமைக்கப்படும் என அறிவித்திருந்தோம். இதற்காக முதல்அமைச்சர் ரூ.42.90 கோடி



நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்திருந்தார். தொடர்ந்து 6 ஏக்கர் நிலத்தில் நீர் சறுக்கு அகாடமி அமைக்க வருகிற 5ந்தேதி பணிகள் தொடங்கப்படவுள்ளது.

2026–ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் நீர் சறுக்கு அகாடமி பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மையத்தில் வீரர்கள் தங்குமிட வசதி, வாட்டர் ஸ்போர்ட்ஸ் சென்டர், பார்க்கிங் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் அமைய உள்ளது. இந்த அகாடமியில் நீர் சறுக்கு, துடுப்பு படகு, செயிலின் உள்ளிட்ட பல நீர் சார்ந்த விளையாட்டுகளுக்கும் உலக தரம் வாய்ந்த பயிற்சிகள் வழங்கப்படும்.

சென்னையில் ஆண்டுதோறும் சர்வதேச அளவில் நீர் சறுக்கு போட்டி நடைபெறுகிறது. இதில் உலகில் உள்ள பல்வேறு நாடுகளின் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின்போது அமைச்சர் ராஜகண்ணப்பன், நவாஸ் கனி எம்.பி, மற்றும் அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

அதேபோல் ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் ராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., ஏற்பாட்டில் நடந்த நிகழ்ச்சியில் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு சுமார் 850 கபடி வீரர்களுக்கு ரூ.26 லட்சத்து 35 ஆயிரம் மதிப்புள்ள காப்பீடு திட்டம் மற்றும் உபகரண பொருட்களையும் வழங்கினார்.

முன்னதாக தி.மு.க. பிரமுகரின் இல்ல திருமண விழாவில் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு திருமணத்தை நடத்தி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், 2026 சட்டமன்ற தேர்தலில் நிச்சயம் தி.மு.க. ஆட்சி அமைக்க போவது உறுதி. 2வது முறையாக முதலமைச்சராக ஸ்டாலின் அமரப்போவது உறுதி. தமிழ்நாட்டு மக்கள் பாரதீய ஜனதா அரசை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

## ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில்

# ராயப்பேட்டை சீனிவாச பெருமாள் கோவிலில் 2,500–வது கும்பாபிஷேகம்: சேகர்பாபு பங்கேற்றார்

சென்னை, பிப்.3–

முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றபிறகு, இந்து சமய அறநிலையத்துறையில் 2,500 வது குடமுழுக்காக இன்றைய தினம் ராயப்பேட்டை சீனிவாச பெருமாள் திருக்கோயில் குடமுழுக்கு 14 ஆண்டுகளுக்கு பிறகு சிறப்பாக நடைபெற்றது. இதில் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பங்கேற்று சிறப்பித்தார்.

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

நேற்றைய தினம் 68 குடமுழுக்குகளும், இன்றைய தினம் நடைபெறும் 27 குடமுழுக்குகளையும் சேர்த்து இதுவரை 2,504 குடமுழுக்குகள் நடந்தேறி இருக்கிறது. இதில் 5 கோயில்கள் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயிலாகும். இந்த அரசு பொறுப்பேற்றபின் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாக்க ரூ.300 கோடி அரசு மானியத்தை வழங்கியுள்ளது.

மேலும், உபயதாரர்கள் மற்றும் கோயில் நிதி ரூ.127 கோடி சேர்த்து மொத்தம் ரூ.427 கோடி செலவில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் 3,000





திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்படும்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, கோயில்களுக்கு சொந்தமான ரூ.7,139 கோடி மதிப்பிலான 7,431 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. மாநில வல்லுநர் குழுவால் 11,170 திருக்கோயில்களுக்கு திருப்பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் இந்து சமய அறநிலையத்துறையில் ரூ.5,515.54 கோடி மதிப்பிலான 23,234 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில் உபயதாரர்கள் மட்டும் ரூ.1,261 கோடி மதிப்பிலான 9,899 திருப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ராயப்பேட்டை சீனிவாச பெருமாள் திருக்கோயிலுக்கு உபயதாரர்கள் நிதியில் ரூ.46 லட்சம் மதிப்பீட்டில் வெள்ளித்தேர் பணிகள் நிறைபெற்று விரைவில் ஒப்படைக்கப்பட உள்ளது.

ஒரு கால பூஜைத் திட்டத் திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்ட வைப்பு நிதி ரூ.1 லட்சத்திலிருந்து, ரூ.2 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு இதுவரை 17 ஆயிரம் கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. தேனாம்பேட்டை பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வரும் மே மாதத்திற்குள் குடமுழுக்கு நடத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், சென்னை மண்டல இணை ஆணையர் கி.ரேணுகாதேவி, உதவி ஆணையர் கே.பாரதிராஜா, அறங்காவலர் குழுத் தலைவர் வி.வசந்த குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரையில் இன்றும் நாளையும் 144 தடை உத்தரவு: கலெக்டர் அறிவிப்பு

மதுரை, பிப். 3–

மதுரை மாவட்டம் முழுவதும் இன்றும், நாளையும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மதுரைமாவட்டம்திருப்பரங்குன்றம் மலைமீது காசி விஸ்வநாதர் கோவில் மற்றும் தர்காவில் தினந்தோறும் ஏராளமானோர் வழிபாடு நடத்தி வருகின்றனர். ஆனால், கடந்த சில நாட்களாக மலைமீதுள்ள தர்காவில் ஆடு மற்றும் கோழியை உயிர்பலி கொடுக்கக் கூடாது என இந்து அமைப்பினர் வலியுறுத்தி வருகின்றனர். இதனால் திருப்பரங்குன்றம் மலையை காக்க, நாளை அறப்போராட்டம் நடத்தப்படும் என இந்து முன்னணி அமைப்பு அறிவித்துள்ளது.

இந்த போராட்டத்தில் தென் மாவட்டங்களில் இருந்து பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்களும் கலந்து கொள்ள உள்ளதால் காவல்துறையினர் அனுமதி மறுத்து உள்ளனர்.

இதனிடையே இந்து மற்றும் இசுலாமிய அமைப்புக்களை சார்ந்தோர் திருப்பரங்குன்றம் மலை குறித்து தங்கள் கோரிக்கை மற்றும் பல்வேறு கருத்துக்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்து வருகின்றனர். இதனால் இந்து மற்றும் இஸ்லாமிய அமைப்பினர் இடையே அசாதாரண சூழல் உருவாகியுள்ளது.

இந்நிலையில் மதுரை மாநகரில் வெளிநபர்கள் பிரவேசிக்காத வகையில் 144 தடை உத்தரவு (163 BNSS) பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்து முன்னணி போராட்டம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இன்றும், நாளையும் மதுரையில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மதுரை மாநகரில் இன்று காலை 6 மணி முதல் நாளை இரவு 12 மணி வரை 144 தடை உத்தரவு அமலில் இருக்கும் என மாவட்ட ஆட்சியர் சங்கீதா அறிவித்துள்ளார். பொது அமைதியை சீர் குலைக்கும் வகையில் போராட்டங்கள், தர்ணா மற்றும் பொதுக்கூட்டங்கள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள காசிவிஸ்வநாதர் கோவில் மற்றும் தர்காவில் வழிபட தடையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண் ஏடிஜிபி உயிருக்கே ஆபத்து; போலீஸ் துறைக்கு ஒரு கரும்புள்ளி...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து காவல்துறை தலைமை இயக்குனரிடம் புகார் கொடுத்து 6 மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவரது குற்றச்சாட்டுகளை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. காவல்துறை உதவி ஆய்வாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டவர்கள் பட்டியலை சென்னை ஐகோர்ட் ஏற்றுக் கொள்ளாததற்கும், சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர் செயலாளராக இருந்த கல்பனா நாயக் எழுப்பியுள்ள குற்றச்சாட்டுகளுக்கும் தொடர்பு இருப்பதாகவே தோன்றுகிறது. இந்த விவகாரத்தில் உண்மை என்ன? என்பது மக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டியதும், காவல் உதவி ஆய்வாளர்கள் நியமனத்தில் சமூகநீதி நிலைநாட்டப்படுவதும் அவசியமாகும்.

### சிபிஐ விசாரணை தேவை

அதேபோல், காவல்உதவி ஆய்வாளர் நியமனத்தில் முறைகேடுகளை அம்பலப்படுத்தியதற்காக கல்பனா நாயக்கை படுகொலை செய்யும் நோக்குடன் அவரது அலுவலகத்தில் தீ விபத்து ஏற்படுத்தப்பட்டதா? என்பது குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டியது உடனடித் தேவையாகும். எனவே, உதவி ஆய்வாளர்கள் தேர்வில் முறைகேடுகள் நடந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து சென்னை ஐகோர்ட் நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்து விசாரிக்க அரசு ஆணையிட வேண்டும். பெண் ஏடிஜிபி கல்பனா நாயக்கை படுகொலை செய்ய சதி நடந்ததாக கூறப்படுவது குறித்து சி.பி.ஐ .விசாரணைக்கும் தமிழக அரசு ஆணையிட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது .


**பெயர் மாற்றம்**

நான், ரகுபதி ரவி (RAGUPATHI RAVI), த/பெ. ரவிச்சந்திரன், வயது 28, பிறந்த தேதி: 15.10.1996, எண்.2/127, அஞ்சலகதெரு, வாகையூர் அஞ்சல், திட்டக்குடி தாலுகா, கடலூர்-606106 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனிமுதல் **ரகுபதி ரவிச்சந்திரன் (RAGUPATHI RAVICHANDIRAN)** என்று அழைக்கப்படுவேன்.

-ரகுபதி ரவி
(RAGUPATHI RAVI)

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after I, **R. Koteshwaran,** S/o. A. Ramakrishnan aged 24 years, permanently residing at No. 48/12, 3rd Street, Karunanithi Salai, Vyasarpadi, Chennai - 600 039.. intended having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council building, High Court Campus, Chennai - 600 104.
Those who have any valid objections may notify the same to the Bar Council within ten days.

**R. Koteshwaran**

******

After 10 days of the publication of this notice and within three months there after I, **K. Janani,** D/o. V. Kannan aged 27 years, permanently residing at No.84/70, Muthiaha Street, Vellala Teynampet, Chennai- 600 086.intended having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council building, High Court Campus, Chennai - 600 104.
Those who have any valid objections may notify the same to the Bar Council within ten days.

**K. Janani**

******

After 10 days of the publication of this notice and within three months there after I, **B. Durga,** D/o. C. Babu aged 24 years, permanently residing at No.44/D, Vijayalakshmi Nagar, Surapet Road, Puthagaram, Chennai - 600 099. intended having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council building, High Court Campus, Chennai - 600 104.
Those who have any valid objections may notify the same to the Bar Council within ten days.

**B. Durga**

******

**விவ்ரிடி அசெட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட்**

(CIN - U65929TN2019PTC127644)

பதிவு அலுவலகம் : பிரஸ்டீஜ் ஜக்ரியா மெட்ரோபாலிடன், எண்.200/1-8, 1வது தளம், பிளாக்-1, அண்ணா சாலை, சென்னை 600002.

**டிசம்பர் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனித்த நிதிநிலை முடிவுகள்**

[செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்), விதிகள் 2015ன் விதி 52(8) மற்றும் 52(4)]

(₹ லட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | டிசம்பர் 31, 2024ல் முடிவடைந்த காலாண்டு | டிசம்பர் 31, 2023ல் முடிவடைந்த காலாண்டு | மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|
| | | (தணிக்கை செய்யப்படாதது) | (தணிக்கை செய்யப்படாதது) | (தணிக்கை செய்யப்பட்டது) |
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 1,279.22 | 1,309.11 | 4,819.24 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன்) | (69.49) | 12.67 | (269.98) |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | (69.49) | 12.67 | (269.98) |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | (47.90) | 9.12 | (205.93) |
| 5. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | (53.24) | 6.85 | (217.51) |
| 6. | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 2,038.58 | 1,691.55 | 2,038.58 |
| 7. | நிலுவையில் உள்ள கட்டாயமாக மாற்றக்கூடிய முன்னுரிமை பங்குகள் | 992.95 | 992.95 | 992.95 |
| 8. | ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக) | (3,202.84) | (3,124.85) | (3,128.71) |
| 9. | பங்கு பிரீமியம் கணக்கு | 17,171.74 | 12,799.77 | 17,172.25 |
| 10. | நிகர மதிப்பு | 17,000.43 | 12,359.42 | 17,075.08 |
| 11. | செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை | 3,377.55 | 7,105.72 | 3,800.87 |
| 12. | நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள் | NA | NA | NA |
| 13. | கடன் பங்கு விகிதம் | 0.20 | 0.57 | 0.22 |
| 14. | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/-) (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்) 1. அடிப்படை 2. டைலூட்டட் | (0.17) (0.17) | 0.04 0.03 | (0.73) (0.73) |
| 15. | மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | NA | NA | NA |
| 16. | மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | NA | NA | NA |
| 17. | கடன் சேவை கவரேஜ் விகிதம் | 0.31 | 0.84 | 0.09 |
| 18. | வட்டி சேவை கவரேஜ் விகிதம் | 0.64 | 1.57 | 1.03 |

**குறிப்பு :**

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் பாம்பே ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (BSE: www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.vivritiamc.com) ஆகியவற்றில் கிடைக்கும்.
2. செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015, விதி 52(4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்சேஞ்(பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து (www.bseindia.com)ல் அணுகலாம்.

விவ்ரிடி அசெட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
வினீத் சுகுமார்
நிர்வாக இயக்குனர்
DIN: 06848801

இடம் : சென்னை
தேதி : 30 ஜனவரி 2025